# ONGC PUBLIC SCHOOL
# NERAVY - KARAIKAL

ஓ என்ஜிசி பொதுப் பள்ளியில் 12/12/2022 திங்கட்கிழமையன்று மதியம் 1.00 மணியளவில் கீதா ஜெயந்தி விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வானது, பள்ளியின் கல்வி இயக்குனர் திரு.பொன்ராமன் அவர்கள் தலைமையில் பள்ளி முதல்வர் திரு.ராஜவேல் அவர்கள் மற்றும் துணை முதல்வர் திரு.எட்வின் சாமுவேல் அவர்கள் வழிநடத்த சிறப்பாகத் தொடங்கியது. இந்நிகழ்விற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் சமஸ்கிருத ஆசிரியை திருமதி. ஹேமலக்ஷ்மி மற்றும் ஹிந்தி ஆசிரியை திருமதி.அம்ருதவள்ளி அவர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர். இவ்விழாவிற்கு மாணவர்களும் பெற்றோர்களும் மற்றும் எம் பள்ளி ஆசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.




இந்நிகழ்வானது இறை வழிப்பாட்டுடன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கப்பட்டது. தொடர்ந்து ஆசிரியை திருமதி. ஹேமலக்ஷ்மி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பள்ளியின் கல்வி இயக்குனர் திரு.பொன்ராமன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் பகவத்கீதையின் சிறப்பினை விவரித்து சில படிநிலைகளை எடுத்துரைத்தார். கீதையை பல மொழிகளிலும் மொழிப்பெயர்த்து இருக்கிறதாகவும்

குருஷேத்திர யுத்தத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கீதையை உபதேசித்த நாளே கீதா ஜெயந்தி என்றும் கூறினார். பள்ளியின் முதல்வர், திரு.ராஜவேல் அவர்கள், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எம்முறையில் கற்பிக்க வேண்டும் என்பதையும் குருஷேத்திர யுத்தத்தில் பகவான் கிருஷ்ணர் பகவத்கீதையில் 700 ஸ்லோகங்களில் 40 நிமிடத்தில் சொன்னார் என்றும் கூறினார். ஹிந்தி ஆசிரியை திருமதி. அம்ருதவள்ளி பகவான் கிருஷ்ணர் பகவத்கீதையில் சொல்லப்பட்ட கருத்துகளை நமது வாழ்க்கையில் எந்த தருணத்தில் தரும




நெறிமுறைகளையும், அறநெறி முறைகளையும் கடைபிடிக்க வேண்டும் என்பதையும், தனி மனித ஒழுக்கங்களையும் நம் வாழ்நாளில் செய்யும் பாவ புண்ணியங்களின் பலனையும் இறப்பிற்குப் பின் நம் ஆத்மா புண்ணியங்களுக்கு ஏற்ப பரமாத்மாவை அடைவதையும், நமது ஆத்மா வேறு உடலை எடுப்பதையும் விளக்கி கூறினார். சமஸ்கிருத ஆசிரியை திருமதி. ஹேமலக்ஷ்மி குருஷேத்திர போரில் குழம்பிய அர்ச்சுணனுக்கு கிருஷ்ணரின் உபதேசங்களை சமஸ்கிருத மாணவர்களைக் கொண்டு நாடகமாக நடத்தினார். இந்நிகழ்ச்சியினை பெற்றோர்கள் , மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கண்டுகளித்தனர்.





பாலர் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் பஞ்சதஷோ அத்யாயத்தில் உள்ள ஸ்லோகங்களை பாடி அனைவரையும் மகிழ்வித்தனர். பள்ளியின் இயக்குனர் திரு.பொன்ராமன் அவர்கள், பள்ளியின் முதல்வர் திரு.ராஜவேல் அவர்கள் மற்றும் பள்ளியின் ஆசிரியர்கள் அனைவரும் சேர்ந்து பகவத்கீதையில் உள்ள பஞ்சதஷோ அத்யாயத்தில் உள்ள ஸ்லோகங்களை கூட்டுப் பாராயணம் செய்தனர்.





இறுதியாக ஆங்கில ஆசிரியர் திருமதி சைலஜா அனைவருக்கும் நன்றி நவில அனைவரின் ஒத்துழைப்போடு, ஆசிரியர்களின் பகவத்கீதை ஆரத்தி பாடலுடன் இவ்விழாவானது இனிதே நிறைவுற்றது.